www.tamilarangam.net

# TBC தமிழ் வானொலி, வான்முரசு சஞ்சிகை மீதான தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்முறை

TBC தமிழ் வானொலி மற்றும் அதன் மாதாந்த சஞ்சிகையான வான்முரசு இவைகட்கு எதிராக தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு புதிய வன்முறையையும் பிரச்சாரத்தையும் ஆரம்பித்துள்ளனர். சுவிஸில் தமிழ்க்கடைகளிலிருந்து வான்முரசு இதழை எடுத்துக் கிழித்து எறிந்ததோடு அதன் விற்பனைத் தடையோடு வான்முரசும் TBCயும் தமக்கு எதிராக பொய்பிரச்சாரம் செய்யும் போக்கை கொண்டுள்ளன என்று எச்சரிக்கை செய்துள்ளனர். இது TBC, வான்முரசு இரண்டையும் பகிஷ்கரிக்க கோரும் அறிவிப்பே ஆகும். இந்த நடவடிக்கைகளில் TBC யின் போட்டிச் சேவையாகவும் தமிழீழவிடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் இயங்கும் IBC தமிழ்வானொலியும் நசிக்கிடாமல் இறங்கியுள்ளது. புலிகளின் வன்முறையும் ஜனநாயக மற்றும் மாற்று சிந்தனை மறுப்பும் தாம் ஒருபோதும் சாகப்போவதில்லை என்று மீண்டும் மீண்டும் அறிவிக்கின்றன. கடந்த இரு பத்தாண்டுகளாக புகலிடத்தில் புலிகளின் கொலைகள் வன்முறைத்தாக்குதல்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் மேலானதடைகள் வரலாற்றை தமக்குச் சாதாமாய் இட்டுக்கட்டும் பிரச்சாரங்கள் என்பனவற்றால் நிரம்பியுள்ளன. சுதந்திரமான கருத்துக்கள் மாற்றுச் சிந்தனை வடிவங்கள் என்பன வெடி வேண்டித்தரப் போதுமான நடவடிக்கைகளாகவும் புலிகளை வீணாக ஆத்திரம் ஊட்டும் செயல்களாவும் புரிந்து கொள்ளப்படுகின்றன. சமூகஉணர்வாளர்கள் இனம், சாதி, மதம் கடந்த மனித சிந்தனையாளர்கள் போன்றோர்களினதும் அமைப்புக்களினதும் கருத்துக்கள் சிறிலங்கா அரசின் கூலிகளின் கருத்துக்களாகவும் அரசுசார்பு தமிழ்குழுக்களது நபர்களது சிந்தனைகளாகவும் புலிப் பிரச்சாரங்களால் இட்டுக் கட்டப்படுகின்றது. உண்மைக் கருத்தியல்களை சந்தர்ப்பவாதமாய் திருத்திப் புரட்டும் ஈனத்தனம் என்பது புலிகளுக்கு கைவந்த கலாச்சாரமாகும். தமிழ்தேசியவிடுதலை சம்பந்தமான மார்க்சிய மதிப்பீடுகளைக் கண்டு புலிகள் அஞ்சிச் செத்தனர். புலிகள் புகலிடத்தில் விரும்புவது இலங்கை போன்று தன்னுணர்வோ சுய அடையாளமோ அற்ற மனிதம் பறிக்கப்பட்ட தம்மை மட்டுமே சதா தொழுது பின் தொடரக் கூடிய ஒரு மனித மந்தையைப் படைக்க விரும்புகின்றனர். கேள்விகளும் சந்தேகங்களும் அற்ற மனித புலித்தலைமையை பயபக்தியோடு பூசை செய்யத் தக்க அரசியல் அடியாட்களை தம்மைச் சுற்றிப் படைத்துவிட்டுள்ளனர். மனிதநாகரீகப் போக்குகளோடு பழக்கமற்ற சர்வாதிகாரக் கருத்தியல் ஒழுங்கும் அதீதமான மண்டை தெறிக்கும் தமிழ் வெறியும்தான் இவர்களது அரசியல் வெறுமையை இட்டு நிரப்புகின்றது. புகலிடத்தில் தமிழ் மக்களின் அறிவியல் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் தெருச்சண்டியர்களாக சொந்த மக்களின் சிந்தனை வரம்பை கட்டுப்படுத்தி இயக்குபவர்களாக இவர்கள் உள்ளனர். அரசியல் சமூக கலைசார்ந்த சகல வடிவங்களிலும் இவர்களின் கட்டளைகள் எச்சரிக்கைகள் சர்வாதிகார அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. இந்த மனிதம்துறந்த அரசியல் மறுத்தோடிகளின் அடக்குமுறைச் செயற்பாடுகள் இப்போது TBC, வான்முரசு இவைகள் மேல் முற்றுகையிட்டுள்ளன. செயற்படமுடியாத வண்ணம் நிர்பந்தங்களை சுமத்தி தடைசெய்து புகலிடப் பரப்பிலிருந்து அகற்றி விடுவதன் மூலம் தம் கடைந்தெடுத்த ஊதுகுழலான IBC க்கு புதிய தடையற்ற செழுமையான வாய்ப்புகள் மக்கள் மத்தியில் கிடைக்கும் என்று நம்புகின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதை தவிர TBC யும் கிட்டத்தட்ட IBC போன்ற குணநலன்களையுடையது தான். புகலிடத் தமிழ் மக்கள் மத்தியில் பொதுவாயுள்ள சமயம் மொழி சார்ந்த நம்பிக்கைகளையும் இனம் சார்ந்த போக்குகளையும் பயன்படுத்திக் கொண்டு கடைவிரிப்பதே இவர்களது போக்கு. பரந்த மனித பார்வைக்குப் தடையான குறுகிய மூர்க்கமான தமிழ்வெறி, சாதாரண சிங்கள முஸ்லீம் மக்கள் மீதான விரோதம் மலையக மக்கள் மீதான அலட்சியம், கண்டுகொள்ளாப்போக்கு என்பன இவர்களது பொது அம்சமாகும். TBC யிடம் உள்ள சந்தர்ப்பவாதம், ஊசலாட்டம் புலிப்பிராத்தனையாளர்களையும் புலிவாதிகளையும் திருப்திப்படுத்தும் விமர்சன வாசனையறியா சித்துவிளையாட்டுக்கள் அதற்கு ஒரு வளர்ச்சியடைந்த அறிவூக்கமுடைய சக்திகளை திரட்டிக்கொள்ளவும் வளரவும் தடையாக இருந்தது. புலிகளின் வசனங்களையும் வாய்ப்பாடுகளையும் TBC வெட்கப்படாமல் நடுநிலைமைக் கோலத்துடன் தொடர்ந்து ஓதிவந்தது. ஒருபுறம் புலிகளுடன் சமரச்சல்லாபம் மறுபுறம் தமிழ்வர்த்தக நிறுவனங்கட்கு விளம்பரதொண்டு என்று எந்த குறிக்கோளும் திடமாக இல்லாத தேர்ந்த வியாபாரியின் பாத்திரத்தை TBC வகித்தது. எனவே கரடுமுரடான கலாச்சாரம் அடையாத, மனிதவிரோத அம்சங்களை தமிழ் விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாட்டுள் மறைந்தபடி மறுபடைப்பு செய்ததோடு ஆரோக்கியமான தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் என்ற கருத்தியலை அறியாமல்போனது. மாற்றீடாக புலிகளின் ஒற்றை சார்பு நிலைக்கருத்தியல்களையே திரும்ப திரும்ப சரணடைந்தது.

எனினும் புலிகளின் மேதகுகள் TBC யின் புலிப்பாசம் தமிழீழம் மேலான பரிவு இவைகளை நம்பத் தயாராக இல்லை என்பதோடு தமது IBC க்குப் போட்டியாகவுள்ள நிறுவனத்தின் புதிய கபடம் என்றே மதிப்பிட்டனர். புலிகளின் விரிந்து பரந்த தமிழ்பரப்பில் தமக்கும் தன் சர்வ ஆதிபத்தியத்திற்கும் உட்படாத எதையும் அது புழு பூச்சியே ஆனாலும் அவர்கள் விட்டுவைப்பதில்லை. TBC மேலான புலிகளின் தாக்குதல் திட்டமிட்ட நடவடிக்கையே வான்முரசு, TBC இவைகளுக்கு எதிரான தடைகளாகும். சுவிஸ்புலிகளின் வன்முறைக்கு TBC எவ்வாறு விடையளித்தது என்பது கவனத்திற்குரியது. இதை அவர்கள் புகலிடத்தமிழ் மக்கள் மத்தியில் உரிய நியாயத்தோடு முன்வைத்து புலிகளை பதிலளிக்கும்படி கோரும் நடவடிக்கைகளுக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதில் இது ஏதோ சுவிஸ் புலிப்பொடியன்களின் தவறு, பொறுப்பற்ற செயல் என்ற தோரணையில் புலிகளின் தலைமைப்பீடத்திற்கு நீதி நியாயம் கேட்டு விண்ணப்பித்தனர். தேசிய தலைவருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. மேலும் புலிகளின் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருக்கப்போவதாய் செய்தி சொன்னார்கள். இவ்வாறாக உதைத்தகால் முன்பு மண்டியிட்டு கிடந்து நீதி கேட்டு புலிகளிடம் தவம் கிடந்தனர். உண்மையில் TBC தனக்கு நேர்ந்தவைகளை, புலிகளால் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக மறுப்புக்களை, வன்முறைப்பிரயோகத்தை புகலிடத்தமிழ்மக்களிடமும் புலிசாராத ஏனைய அரசியல் கலை இலக்கிய அமைப்புக்களிடமும் எடுத்துச் செல்லவில்லை என்பது மட்டுமல்ல இவை அதன் சிந்தனை வட்டத்திற்கு எட்டாத காரியமாகவும் இருந்தது. தமக்குமேல் புலிகள் ஏற்படுத்திய நெருக்கடிகளை மூடி மறைப்பும் சுத்துமாத்தும் இல்லாமல் எடுத்துச் சொல்ல துணிவற்றுப்போனதே TBC யின் பலவீனமான தோல்வியின் அடிப்படையாகும். தம்மேலான புலிகளின் பலாத்காரத்திற்கும் தொடர்ந்து இடைவிடாமல் வரும் நெருக்கடிகளுக்கும் அது மிகப் பரந்த மக்கள் தொடர்புள்ள வானொலியைப் பயன்படுத்தும் துணிவு அதற்கு கிட்டாமலே போனது. புலிகளின் தலைமையிடம் நீதி கோரி பிச்சைப்பாத்திரம் ஏந்துவது என்பது வன்முறைக்கு உத்தரவிடும் நிர்வாகிகளிடம் நாகரீகமான மனிதஉலகிற்குரிய கருத்து எழுத்துச் சுதந்திரத்திற்காக தண்டனிடுவதும் தான் TBc யின் ஆகக்கூடிய கிளர்ச்சி நடவடிக்கையாக இருந்தது ஆனால் புலிகளிடம் விடப்பட்ட வேண்டுதலுக்கான விளைவு அனைவரும் எதிர்பாத்தபடியேதான இருந்தது.

புலிகளின் தலைப்பீடம் சார்பில் தமிழ்ச்செல்வன் TBc க்கு அனுப்பிய கடிதத்தில் TBC யை தமக்கு எதிராக பொய்ப்பிரச்சாரம் செய்பவர்கள் எனவும் ஆதரவு போல் வேடமிட்டு தமக்கு எதிராய் செயற்படுபவர்கள் என்ற கருத்துப்பட கண்டித்து இறுதி எச்சரிக்கையும் விட்டதோடு சுவிஸ்புலிகளை □ அச்சாக்குஞ்சுகள் □ என்று பராட்டாத குறையாக உச்சி மோர்ந்து உசார் வழங்கியது. TBC வான்முரசு குழுவினர் தாம் புலிகளின் அடாத்தை சிந்தனை மறுப்பை வெளியே கொண்டுவரும் பிரச்சாரப்படுத்தும் உத்தியாகத்தான் புலித்தலைமைக்கு வேண்டுகோள் விட்டதாய் இரகசியசெய்தி வாசிக்ககூடும். இது பகுதி உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் TBC யும் புலிகளின் மேல் விமர்சனமற்ற ஆதரவு குத்தகை பிரச்சாரப் போக்கையே வழிநடத்தியது ஊக்குவித்தது என்ற குற்றச்சாட்டிலிருந்து அது ஒருபோதும் தப்பு முடியாது. அதன் ஆரம்பகால நடுநிலை,பக்கம் சாராமை என்ற வாக்குறுதிகளிலிருந்து அது வழுக்கி அது எவ்வாறு நேர்மையழிந்த புலிப்பிரச்சார வெள்ளத்துள் இழுபட்டது என்பதற்கு சாட்சியம் அதனிடமேயே உள்ளது. சிறலங்காஅரசு, இந்தியஅரசு தமிழ்நாட்டு அரசியல் என்று நீதி விசாரணை நடத்த துணிந்த TBC புலிகளிடம் நீதி விசாரணைக்குப் பதில், ஆய்வு நோக்கிலான பார்வைக்குப் பதில் புலி மீதான புகழ் பாடலில் தானும் கலந்து கொண்டது. இப்போது அதே புலிகளால் குதறப்பட்டு கடிகாயத்தோடு நிற்கின்றது. வெளியே பேசவும் எழுதவும் முடியாமல் தம்முள் வெந்து வேகுகின்றது. தனிமையில் பொங்கி வெடிக்கிறது. இலங்கைஅரசும் இராணுவமும் தமிழ் மக்களுக்கு செய்த கொடுமைகளை சுதந்திரமாய் பேச முடிந்தவர்களால் அதை நிவூட்டும் விசேட நிகழ்ச்சிகளை நடாத்தி தமிழ்மக்களை உணர்வுகொள்ள வைத்தவர்களால் தமிழ்மக்களின் சொந்த போராட்டத்தின் நன்மை தீமைகளைப் பேச, வாய்திறக்க முடியவில்லை. புலிகளால் கொன்று குவிக்கப்பட்ட சாதாரண சிங்கள மக்களை காத்தான்குடியில் கழுத்தறுத்துக் கொல்லப்பட்ட பலநூறு முஸ்லீம் மக்களை பற்றி ஒரு சிறு நிகழ்ச்சி, நினைவுக்குறிப்பு எதுவும் கூட ஒலிபரப்ப முடியவில்லை. புலிகளின் இராணுவ வெற்றிக் கொண்டாட்டங்களில் வீரவிழா மாவீரர் தினப்பிரகடனங்களில் அந்த மக்கள் மறைக்கப்பட்டனர். ஆனால் சிங்களவர்களை வெட்டவேண்டும் கொத்தவேண்டும் சோனகர்களை நம்பக்கூடாது என்ற என்ற மனிதவிரோத குரல்கள் TBC, IBC இரண்டு தமிழ் வானொலிகளிலும் தாராளமாகக் கேட்டன. அநுராதபுரத்தில் செய்தது சரி இன்னும் செய்யவேண்டும் என்று கூட வெறித்தனமான குரல்கள் புகலிடத் தமிழ்மக்கள் செவியில் வந்து விழுந்தமைக்கு தாம் பொறுப்பு இல்லை என்று இவர்கள் கூறமுடியாது. சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் தமிழ்மக்கள் மீதான கொலைகளை புலிகளின் சிங்கள மக்கள் மேலான பயங்கரவாதத்தால் நியாயப்படுத்திவிட முனைந்தனர். ஒரு ஒடுக்குமுறை இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையேயான அடிப்படையான வித்தியாசங்கள் மனிதமதிப்பீடுகள் குறித்த சிந்தனைகள் கூட இவர்களிடம் தட்டுப்படவில்லை. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இடதுசாரி அமைப்புக்கள் மனிதாபிமான சக்திகளின் தமிழ்மக்களுக்கு ஆதரவான செய்திகளைக் கூட விட்டுவிட்டு வெறிகொண்ட சிங்களஇனவாத அமைப்புக்கள் பௌத்த அமைப்புக்களின் அறிக்கைகளை மீண்டும் மீண்டும் ஒலிபரப்பி தமிழ்மக்களை வெறியூட்ட முறப்பட்டனர். இலங்கை அரசு மற்றும் இராணுவம் சிங்கள இனவாத சக்திகளின் தமிழ் எதிர்ப்பை முழுசிங்கள மக்களும் தமிழ்மக்களை எதிர்ப்பதாய் சோடனை செய்ய முனைந்தனர். ஒரு ஒடுக்குமுறை அரசிற்கும் போராளிகட்கும் இடையோன அடிப்படையான வித்தியாசங்கள் மனிதமதிப்பீடுகள் குறித்த சிந்தனைகள் கூட இவர்களிடம் தட்டுப்படவில்லை. சிங்களமக்கள் மத்தியிலுள்ள இடதுசாரி அமைப்புகள், மனிதாபிமான சக்திகளின் தமிழ்மக்களுக்கு ஆதரவான செய்திகளைக் கூட விட்டுவிட்டு வெறிகொண்ட சிங்களஇனவாத அமைப்புகள், பௌத்தஅமைப்புகளின் அறிக்கைகளை மட்டும் மீண்டும் மீண்டும் ஒலிபரப்பி தமிழ்மக்களை வெறியூட்ட முறபட்டனர். இலங்கைஅரசு மற்றும் இராணுவம் சிங்கள இனவாத சக்திகளின் தமிழ் எதிர்ப்பை முழுச் சிங்கள மக்களும் தமிழ் மக்களை எதிர்ப்பதாய் சோடனை செய்யமுயன்றனர். அரசியல் மோசடியில் இறங்கினர். தமிழ்த்தேசிய உணர்வானது மனிதநேயப்பரப்புக்களை தாண்டி வெறுமனே தன் சொந்த குறுகிய இனப்பெருமையில் மூழ்கவும் இவர்களது பிரச்சாரங்களும் உடந்தையாக இருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்மக்கள் தம் தாய் நிலத்தை விட்டு பல்லாயிரம் கிலோமீற்றர் தொலைவில் வாழ்ந்தபோதும் புகலிடத்தில் சீவியம் நடத்தியபோதும் ஏதோ புலிகளின் இராஜதானியில் மேதகு தேசியதலைவரின் நேரடி கண்காணிப்பிலும் எல்லையில்லாக் கருணையிலும் அவர்களின் உயிர்வாழ்வு விதிக்கப்பட்டுள்ளதான மனோபாவத்தை விதைத்தனர். புலிகளுக்கு செவிமடுத்து கட்டுண்டு அவர்கட்கு கடமை செய்து வாழவேண்டிய கடப்பாடு முழுத்தமிழ்மக்களுக்கும் இருப்பதாய் சொற்களில் மருட்டல்கள் விடுக்கப்பட்டன. புலிவாதிகளின் புகலிடத்தமிழ் மக்கள் மேலான அரசியல் நாட்டாண்மை பலவந்தங்கள் தப்பித்தவறிக்கூட பேசப்படாததோடு புலிகளை புகழ்பாடும் திருத்தொண்டும் அவர்களின் ஆதரவாளர்கள்ள வசப்படுத்தும், தம்பக்கம் இழுக்கும் தந்திரங்களும் வெளிப்படையாகவே சாதாரணமாக அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய மட்டத்தில் நடந்தன. எனினும் TBC யால் புலிவாதிகளுடன் நீண்ட நாட்களுக்கு முரண்பாடுகளை ஒத்திபோட முடியாமைக்கு சொந்த விலாங்குப்புத்தியும் காரணமாகும். பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல் என்ற போக்கை நீண்டநாட்களுக்கு TBC யால் அரங்கேற்ற முடியவில்லை. ஒருவேளை TBC யில் ஒரு பிரிவினர் புலிகள் இப்போது திருந்திவிட்டனர் என்றும் நரமாமிசம் புசிப்பதை கைவிட்டுவிட்டார்கள் என்றும் நம்ப விரும்பினர் போலும். புலிகளின் கடந்தகால சர்வாதிகாரத்தை பேசாமல் விடுவதன் மூலம் அவர்கள் நிகழ்கால சர்வாதிகாரத்திலிருந்து தப்பிவிடமுடியும் என்று அப்பாவித்தனமாக இவர்கள் நம்பினார்கள். தமிழ்மக்களுக்கு விசுவாசமாய் உண்மை பேசாதவர்கள் இன்று புலிகளின் ஏவல் பேய்களால் தண்டிக்கப்படும் போது புகலிடத்தின் சமூகவிடுதலை உணர்வுமிக்கவர்களினதும் ஏனைய ஜனநாயக சக்திகளிடமிருந்தும் துணிவோடு ஆதரவு கோர முடியாத இக்கட்டுக்குள் உள்ளனர்.

புலிகள் சீவியத்திலும் நேசசக்திகள் போராட்ட துணைச்சக்திகள் என்ற மட்டத்தில்கூட யாரையும் ஏற்று அறியாதவர்கள். அவர்கட்கு சமமற்ற மட்டத்தில் கூட தொண்டு செய்யும் நிலையில் கூட தனிக்குழுக்களோ போக்கோ கூட இயங்குவதை கொஞ்சமேனும் சகிக்காதவர்கள். அவர்கள் மட்டுமே தனிப்பெரும் இயக்கம்! அவர்கள் மட்டுமே தமிழ்மக்களின் தனிப்பெரும் தலைமை!! இதற்குத்தடையாக இருந்தவைகளை அழிக்க தமிழ்மக்கள் தரப்பில் கொடுக்கப்பட்ட உயிர்பலி யாவரும் அறிந்ததே. எனவே TBC யானது குறைந்தபட்சம் தமிழ் மக்களின் தேசியவிடுதலையை மனிதமுகத்தோடு பேசியிருந்தால் அதன் தார்மீக நேர்மையாவது மிஞ்சியிருக்கும். TBC அனுட்டித்த போக்கு மிகவும் மலிவான உபாயமாகும். அது ஈழவிடுதலைப்போராட்டத்தின் அரசியல் அநுபவங்களைக்கூட உள்வாங்கிக் கொள்ளவில்லை. அன்றைய தமிழ்அரசுக்கட்சி காலத்தைய சுதந்திரன் பத்திரிகையின் தரத்திற்கு தமிழ்தேசியம் பேசியது. வழக்கமான கேட்டுச் சலித்த மதிப்பீடுகளும் நடைமுறையிலுள்ள போக்குகளை கேள்வி கேட்டு உலுப்பாத சக்கட்டையான உருப்போடல்களுமே அதன் இயல்பாயிற்று. புகலிடவாழ்வின் அநுபவங்களை அதன் அரசியல் கலாச்சார சமூகவியல் போக்குகளை விமர்சனத்தோடு கண்டுகொள்ளும் வாய்ப்பு அதற்கு இறுதிவரை எட்டாமலே போனது. புகலிடஊடகங்களை புலிசார்ந்த, புலிசாராத சுதந்திரமான ஊடகங்கள் என்று பிரிக்கமுடியுமாயினும் TBC யை புலிசார்ந்த ஆனால் சுதந்திரமான ஊடகமாயே கொள்ளமுடியும். TBC யானது புலிகளின் IBC வானொலியுடன் ஒற்றுமைகளை காணக் கூடியளவு புலிவழிபாடு கொண்டதுதான். தமிழ்நடுத்தரவர்க்கத்தின் பிடிவாதமான மூர்க்கம் விமர்சனம் என்பதை ஒரு அரசியல் பண்பாடு சார்ந்தது என்பதை அறியாதளவு தீவிரமான மதவாதிகளை ஒத்த தீவிர தமிழ் தேசியவெறி உச்சாடனம் என்பன இவர்களின் பொதுவான அம்சமாகும். இது தமிழ் தேசியவிடுதலையை உண்மை உருவத்திற்கு அப்பால் போலித்தனமான கற்பனைகளால் விளக்கமுயன்றன. உலகளாவிய அரசியல்போக்குள் தமிழ்மக்களின் போராட்டத்துக்கு உள்ள பங்கு சாதக பாதக நிலைகளை மதிப்பிட்டு நகரத் தெரியாத அப்பாவித் தனமான தமிழ் பெருமையும் வீரமும் பேசின.

உலகின் ஏனைய தேசியவிடுதலைப்போராட்டங்களை ஏகாதிபத்திய பிரச்சாரங்களின் அதே தொனியில் தீவிரவாதம் தீவிரவாதிகள் பிரிவினைவாதிகள் என்றே இவ்விரண்டு தமிழ் வானொலிகளும் அழைத்தன. இந்தியாவின் தேசிய இனக்கிளர்ச்சிகளையும் இவர்கள் தீவிரவாதம் பிரிவினைவாதம் என்று பெயர் சூடியமை புலிகள் இந்தியஆதரவை தம்பக்கம் வென்று எடுக்க இந்திய தேசிய சமூகவிடுதலை இயக்கங்களைப் பற்றி மூச்சுவிடாமல் இருந்தனர். அதில் வழக்கமான தொடர்ச்சியாகவே இந்த வானொலியின் போக்குகளும் இருந்தன. TBC புலிகளின் அரசியல் போக்கையே தனது மதிப்பீடுகளுக்கு பயன்படுத்தியது என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

TBc யினர் உண்மையில் புகலிடத்தில் புலிகளின் பணபலம், பிரச்சாரபலம், நிறுவனமயப்பட்ட பலம், அதிகாரம், ஆள், அம்பு என்பவற்றைக் கண்டு மிரண்டனர் அவர்கட்குப் பயந்தடங்கிப்போவதே இப்போதைக்கு புத்தி என்ற சராசரியான கருத்தியல்களைக் கொண்டிருந்தனர். மாவீரர்தினக் கொண்டாட்டம் முதல் லண்டனில் புலிகள் மீதான தடைகளின் எதிர்ப்பு வரை புலிச்சாதனங்களை மிஞ்சும் வண்ணம் நடந்து கொண்டனர். TBC யும் வான்முரசும் அரசியல் சிந்தனையின் அவசியத்தாலோ தமிழ்விடுதலை மேலுள்ள கரிசனையாலோ இவர்கள் இப்படி நடந்து கொள்ளவில்லை. மாறாக புலிக்கு உதவிப்பிரச்சாரம் செய்து இக்கட்டான சமயத்தில் கைகொடுத்து நல்லபிள்ளை பெயரெடுக்கும் பிழைப்புவாதப் போக்குமாகும். புலிகள் ஐரோப்பிய அரசுகளோடு ஒரு சொட்டும் முரண்பட்டுவிடாத அளவு பலத்த எச்சரிக்கையோடு இயங்கினர். அவர்களோடு புண்படாத அரசியல் செய்தனர். குசுகுசுபேச்சுவார்த்தை நடாத்தி இரகசிய உடன்பாடுகள் செய்தனர். இச் செய்திகளின் முழுமை தமிழ்மக்களின் கண்களுக்கு காதுகளுக்கு எட்டாத தூரத்தில் புலிகளால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறைக்கப்பட்டன. தான் எச்சக்திக்கும் பணியாதவர்கள் என்ற பிரச்சாரச்சூரத்தனம் செய்யப்பட்டது. ஒருகாலத்தில் சோசலிச தமிழீழம் பற்றி கட்டுக்கட்டாய் எழுதிக்குவித்த புலிகளின் தத்துவ ஆசிரியர் பாலசிங்கம் புலிகளின் தரகனாக ஏகாதிபத்தியநாடுகளோடு இரகசியமாயும் பரகசியமாயும் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டு சாதாரண சிங்களமக்களை மோட்டுச்சிங்களவர் என்று இனவசை பேசல் நடாத்துகின்றார். சிங்கள உரிமைய, சிங்களபலவேகய சிங்கள் இனவெறிக்கட்சிகள் போல் கச போக்கிலித்தனமான இனவாதம் பாலசிங்கத்தால் பேசப்புடுவது புலிகளின் புகலிட வளர்ப்புக்களை திருப்திப்படுத்தி மலிவான கைதட்டல் வேண்டமட்டுமல்ல என்பதை நாம் உணரவேண்டும். தமிழ்மக்களின் எழுச்சியை ஏகாதிபத்தியங்களின் தயவில் தீர்க்கமுடியும் இந்திய ஆதரவில் வெல்லமுடியும் என்று தமிழ்மக்களை நம்ப பண்ணுபவர்கள். ஏகாதிபத்தியங்களின் சிறிலங்கா அரசுக்கான அரசியல் இராணுவ பொருளாதார உதவிகளை தமிழ்மக்களிடம் அம்பலப்படுத்துவதில்லை.

புலிகளின் தத்துவ வித்தகனான அன்ரன் பாலசிங்கம் அண்மையில் லண்டனில் நடந்த புலிகளின் நிகழ்வொன்றில் சந்திரிகாவைப் பற்றி படுபச்சையான பாலியல்பகிடிகளை விட்டதும் ஆண்ஆதிக்கதிமிர் முத்தி தானும் பிரபாகரனும் சந்திரிகாவை யார் வைத்திருப்பது என்பது பற்றி பேசியதாய் அடித்த நக்கல்கள் தமிழ் மக்களின் அரசியல் பண்பாட்டுக்கு கிடைத்த தலைகுனிவாகும். பெண்கள் மீதான ஆணாதிக்க அவமதிப்பும் ஆகும். பாலசிங்கத்தின் இந்தபேச்சு நடந்து கொண்டிருந்த போது புலிக்குப் பெண்விடுதலைப் புத்தகங்கள் எழுதி தந்த அடேல் பாலசிங்கமும் மேடையில் வீற்றிருந்ததோடு தான் எழுதிய பெண்விடுதலைக்காக விசுவாசமாக ஒரு சொல்லும் சொல்லவில்லை. சந்திரிகாவின் சிங்கள இனவாதத்தை அதனுடனான ஏகாதிபத்திய உறவை தமிழ்மக்களுக்கு சொல்லித்தர முதுகெலும்பு அற்றவர்கள் தனிப்பட்ட சந்திரிகாவை சுட்டி பெண் என்று பழித்து பாலியல் சார்ந்த பகிடிவிட்டு அரசியலில் இருந்து தப்பிக்கின்ற புத்திதான் நிலவுகிறது. இப்படியாக தமிழ்மக்கள் மேல் மலிவு அரசியல் சுமத்தப்படுகிறது. காடைத்தனமான பேச்சுக்கள் அரசியல் அந்தஸ்துக் கோரி நிற்கின்றன. மார்க்சிய சிந்தனைப்பாராம்பரியம் பலவீனப்பட்டு போனமையின் விளைவாகவும் இதனை நாம் விளக்கலாம்.

சில மாதங்களுக்கு முன்பாக ஜெனிவாவில் ஐநா சபை முன்பாக ஆர்பாட்டம் நடத்த திட்டமிட்டு IBC வானொலி மூலமாகவும் ஆள்திரட்டும் வேலைகளில் புலிகள் ஈடுபட்டனர். அப்போ சுவிஸ் தேசத்திலிருந்து பேசிய பெருமைமிகு புலிப்பிறவியொன்று பாப்பா கதை மட்டத்தில் அரசியல் பேசிவிட்டு தமிழர்கள் மற்றைய வெளிநாட்டவர்கள் போல் ஒழுங்கு குலைவானவர்களோ குழப்பம் விளைவிப்பவர்களோ இல்லையென்றும் ஒழுங்கும் கட்டுப்பாடும் இலட்சியப்பற்றுக் கொண்டவர்கள் என்றும் மனிதவெறுப்பைச் சக்தியெடுத்தது. வெளிநாட்டவர்களைப் புறக்கணிக்கும் மனித உரிமைகளை வழங்க மறுக்கும் ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டு சகல வெளிநாட்டு மக்களோடும் பிணைப்பையும் கூட்டுறவையும் ஏற்படுத்தும் அரசியலுக்கும் பதிலாக இத்தகைய மேற்கு நாடுகளின் அரசுகளை ஒத்த மனிதர்களிடையே இனரீதியில் பிளவு படுத்தும் போக்கு எவ்வளவு பாதிப்பை தமிழ்மக்களுக்குத் தரும் என்பதைக்கூட புலிகளின் நபர்களால் விளங்கமுடியவில்லை. ஊரிலே வேலி பிரித்து பக்கத்து வீடுகளில் நடப்பதை விடுப்புப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு வெறும் சைவத்தமிழ் மண்டைகளோடு வெளிநாடுகளில் கரைசேர்ந்தவர்களிடம் இதைவிட வேறுஎதையும் எதிர்பார்க்கமுடியாது. இந்தப் புலிமேதைகளின் உலகுகொள்ளாப் பேரறிவை கனநாட்களுக்கு தமிழ்மக்கள் சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்பது மட்டும் உண்மை.

மேலும் யேர்மனியின் பேர்லின் நகரிலும் புலி நபரொருவரின் யேர்மனிய அரசுக்கு உளவு சொல்லிப்பிழைக்கும் செயலையும் குறிப்பிடுவது அவசியம். இவ்வருட மேதினநிகழ்வுகள் முழுயேர்மனியிலும் பேர்லினிலேயே சிறப்பாக அதிக வெளிநாட்டவர்களின் அமைப்புக்கள் இடதுசாரி அமைப்புக்களால் நடாத்தப்பட்டது. ஊர்வலங்கள் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.அப்போது அதிகாரத்திலிருந்த CDU கொம்யூஸ்டுக்களுக்கும் வெளிநாட்டவர்கட்கும் எதிரான மோசமான பாசிசப்போக்குடன் பேர்லினில் இயங்கியது. 8547 தாக்குதல் பொலிசார் 1500 பொலிஸ் மற்றும் தாக்குதலுக்கான வாகனங்கள் மேதின ஊர்வல மக்களுக்கு எதிராக இறக்கப்பட்டன. மேதின ஊர்வலத்தை நூறு வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் நிகழ்ச்சியை தடைசெய்ய முயற்சி செய்ததோடு இடது சாரிகளின் செல்வாக்குள்ள பேர்லினின் ஒரு பகுதியான KREUZBERG இல் சகல ஊர்வலங்களையும் தடையும் செய்தது. தடையை மீறிய ஊர்வலம் மற்றும் Mariannenplatz எனும் இடத்தில் மாலை நடைபெற்ற குழந்தைகள் பெருமளவு கலந்த மேதினக் கொண்டாட்டங்களை பொலிஸ் ஆத்திரமூட்டி தடியடி, கண்ணீர்ப்புகைவீச்சு, வாகனம் மூலம் தண்ணீர் வீச்சு, இவைகளையடுத்து மக்களுக்கும் பொலிசுக்கும் இடையே கலவரங்கள் மூண்டன. வெளிநாட்டவர்கள், இடதுசாரிகள் உட்பட 1112 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டனர். மேதினம் பேர்லினில் மனித வேட்டையாடும் தினமாக அமைந்தது. அத்தோடு பொலிசார் 85 பேரின் புகைப்படங்களை தொலைக்காட்சி இணையம், பத்திரிகைகள் என்பவற்றில் வெளியிட்டு தகவல் தருபவர்களுக்கு சன்மானம் 1000 DM என்றும் அறிவித்தனர். இந்த 85 பேர்களின் படத்தில் ஒரு தமிழ்தோழரின் புகைப்படமும் வெளியிடப்பட்டு இருந்நதது. இவர் பேர்லினில் தமிழ்மக்களுக்கு நன்கு அறிமுகமாக இருந்தபோதும் 2500 க்கு மேற்பட்ட தமிழர்கள் வாழும் பேர்லினிருந்து யாரும் பொலிசுக்கு காட்டித்தரவில்லை. ஆனால் பேர்லினிலுள்ள ஒரு புலி நபர் இந்த தமிழ் தோழர் பற்றிய விபரங்களை பொலிசுக்கு கொடுத்துள்ளார். தமக்கு எதிரானவர்கட்கு எட்டப்பன், காக்கை வன்னியன் என்று தமிரழசுக்கட்சிகால சினிமாத்தனமான பட்டம் சூட்டலில் ஈடுபடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த துரோகிகள் தம் சொந்தமக்கள் பற்றி யேர்மனியப் பொலிசுக்கு காட்டித்தருவதை எந்தப் பெயரால் அழைப்பது?

1994 இல் பாரிஸ நகரில் சமூக உணர்வாளரும் இலக்கியவாதியுமான சபாலிங்கம் கொல்லப்பட்டார். இவரைக் கொன்ற புலி கொலையாளியான பிரகலாதன் ரத்தினவேல் (வயது 31) கனடாவில் பொலிசாரிடம் பிடிபட்டபோது பாரிசிலும் லண்டனிலும் நடத்திய துவக்குச் சூடுகளை ஒப்புக்கொண்டுள்ளார். இவர் பரிசில் சுக்ளாவுடன் சேர்ந்து சபாலிங்கத்தையும் லண்டனில் கனசபை சோம்ராஜ் என்பவரையும் சுட்டதாய் தானே வாக்குமூலம் கொடுத்துள்ள்ார். புலிகள் தவிர வேறு எவரும் சங்கம் அமைப்புக்கள் அரசியல் கலை இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தமுடியாத காலம் ஒன்று இருந்தது. பத்திரிகை சஞ்சிகை வெளியிட முடியாத கொடுங்கோன்மை நிலவியது. ஆனால் இப்போது தமிழ்மக்கள் மத்தியில் புகலிடத்தில் சுதந்திரமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், தமிழ்வானொலிகள், தொலைக்காட்சிகள், அரசியல்,இலக்கிய, கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கிவிட்டன. இனிப் புலிகளால் அவைகளை முன்பு போல் கட்டுப்படுத்த முடியாது தாம்வாழும் நாட்டின் மொழியோடும் பலகலாச்சாரப்போக்குகளோடும் அறிமுகமுள்ள ஒரு தலைமுறையும் இளம் சந்ததியும் உருவாகி வருகிறது. இது புலிகளின் குறுகிய வேலிகளை புகலிடவாழ்வுக்குப் பொருத்தமற்ற தமிழ்போக்கின் கிணற்றுத் தவளைப் போக்கை உடைக்கத் தொடங்கிவிட்டது. மறுபுறம் தமிழ்பழமைவாதிகள் கோவில் கட்டி கும்பாபிசேகம் செய்வதில் இறங்கிவிட்டனர். தமிழ்சசமூகம் பல திக்கிலும் சிதறத்தொடங்கிவிட்டது. இனிமேலும் புகலிடச்தமிழ்ச் சமூகத்தை தன் பிடியுள் புலிகளால் வைத்திருக்கமுடியாது. புலியின் புகலிடம் மேலான ஆக்கிரமிப்பு இனி மெல்லச் சாகத் தொடங்கும்.

முடிவாக TBC இன் மேலான புலிவன்முறையானது தளரத் தொடங்கியுள்ள தன்பிடியை புகலிடத்தமிழ்மக்கள் மேல் மீண்டும் நாட்டமுயலும் புலியின் பிரயாசையாகும் திமிறமுயலும் புகலிடத்தைக் கட்டி வைக்க முயலும் முயற்சியாகும்.

மறுபுறம் TBC மற்றும் வான்முரசுபத்திரிகையின் கருத்து,எழுத்து,பேச்சு சுதந்திரத்திற்காக எந்த இடறுபாடுமின்றிக் குரல் தரும் நாம் அவர்களின் சந்தர்ப்பவாதத்தையும் புலிகளிடம் மீண்டும் மீண்டும் பாவமன்னிப்புக் கோருவதையும் சரணாகதியடைய முயல்வதையும் புலிகளின் வன்முறைக்கும் மனிதவிரோதத்திற்கும் கடந்த காலங்களில் துணைபோனதையும் நடுச்சந்தியில் போட்டுடைக்கத் தவறக்கூடாது தமிழ் மக்கள் மத்தியில் விமர்சித்து, வாதிட்டு, கருத்துப்பரிமாறி வாழும் கலாச்சாரத்தை படைக்கவேண்டும். ஏகாதிபத்தியத்தையும் சிறிலங்கா அரசையும் மட்டுமல்ல புலிகளையும் விசாரணை செய்யும் துணிவைப் பெறவேண்டும்.

**அரசியல் கலை இலக்கியவட்டம், ஜேர்மனி**

**05.07:2001**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்